சுருக்கம்

பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – தமிழ்நாடு நெடுஞ்சாலைப் பொறியியல் பணி – உதவிக் கோட்டப் பொறியாளர்கள் பதவி உயர்வில் கோட்டப் பொறியாளர்களாக பணி நியமனம் – இருக் கோட்டப் பொறியாளர்கள் பணியிட மாற்றம் மற்றும் பணியமர்த்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்கே. 1) துறை

அரசாணை (3டி) எண்: 40 நாள் 07–12–2010

கார்த்திகை மாதம் 21,
திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கவும்:-

1. அரசாணை (நிலை) எண். 43, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 04–02–2010
2. அரசாணை (டி) எண். 19, நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 04–03–2010.
3. அரசாணை (நிலை) எண். 306, நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 01–12–2010
4. முதன்மை இயக்குநர் அவர்களின் கடித எண் 11/ கமு1/ 2010–44, நாள் 03–12–2010.

******

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2009–2010 ஆம் ஆண்டிற்கான கோட்டப் பொறியாளர் பதவிக்கு தகுதிபெற்ற உதவிக் கோட்டப் பொறியாளர்களின் தற்காலிக தேர்ந்தவர் பெயர்ப் பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேற்படி தேர்ந்தவர் பெயர்ப் பட்டியலில் வரிசை எண் 1 முதல் 11 வரை இடம்பெற்றுள்ள உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கோட்டப் பொறியாளர்களாக பதவி உயர்வு அளித்து பணியமர்த்தல் ஆணை வெளியிடப்பட்டது. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்படி தேர்ந்தவர் பெயர்ப் பட்டியலில் திரு ஆர். இசக்கிமுத்துச்செல்வன், உதவிக் கோட்டப் பொறியாளர் அவர்களின் பெயர் 12 (a) என சேர்த்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை இயக்குநர் அவர்கள் மேற்படி தற்காலிக தேர்ந்தவர் பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஏழு உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு அளித்து கோட்டப் பொறியாளர்களாக பணியமர்த்தி ஆணையிடுமாறு கோரியுள்ளார்.

3. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகளில் விதி 39(a)(i) ன் கீழ் கீழ்க்கண்ட உதவிக் கோட்டப் பொறியாளர்கள் தமிழ்நாடு நெடுஞ்சாலைப் பொறியியல் பணி விதிகளில் இனம்–IV-ல் உள்ள உதவிக் கோட்டப் பொறியாளர் பதவியிலிருந்து இனம்–III-ல் உள்ள கோட்டப்

பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வு அளித்து அவர்கள் பணி ஏற்கும் நாள் முதல் அவர்களின் பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில் பணியமர்த்தப்படுகின்றனர் :-

| வ. எண். | பெயர் மறறும் பதவி | கோட்டப் பொறியாளர்களாக பதவி உயர்வில் பணியமர்த்தப்படும் இடம் |
|---|---|---|
| 1. | திரு. ஜி.பிரேம்நாத்<br>உதவிக் கோட்டப் பொறியாளர் | கோட்டப் பொறியாளர்,<br>தரக்கட்டுப்பாடு, விழுப்புரம். |
| 2. | திரு ஆர். இசக்கிமுத்துசெல்வன்<br>உதவிக் கோட்டப் பொறியாளர் | கோட்டப் பொறியாளர்,<br>தேசிய நெடுஞ்சாலை, தஞ்சாவூர். |
| 3 | திரு.எஸ்.கோவிந்தராஜு<br>உதவிக் கோட்டப் பொறியாளர் | துணை தலைமைப் பொறியாளர் (திட்டம்),<br>தேசிய நெடுஞ்சாலை, சென்னை. |
| 4 | திரு.கே.பி.சந்திரசேகரன்<br>உதவிக் கோட்டப் பொறியாளர் | கோட்டப் பொறியாளர்,<br>திட்டங்கள் கோட்டம்–2, சென்னை |
| 5 | திரு.ப்பி.சந்திரன்<br>உதவிக் கோட்டப் பொறியளார் | கோட்டப் பொறியாளர்,<br>ஆய்வு கோட்டம், திருநெல்வேலி |
| 6 | திரு.ஏ.செந்தில்நாதன்<br>உதவிக் கோட்டப் பொறியாளர் | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, , திருச்சி |
| 7 | திரு.எஸ்.பெரியசாமி<br>உதவிக் கோட்டப் பொறியாளர் | கோட்டப் பொறியாளர்,<br>தரக்கட்டுப்பாடு, திருச்சி |

4. மேலும் பின்வரும் கோட்டப் பொறியாளர்கள் அவர்களின் பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களுக்கு மாறுதல் செய்யப்படுகின்றனர்.

| வ. எண் | பெயரும் பதவியும் | பணிமாறுதலில் பணிநியமனம் வழங்கப்படும் பணியிடம் |
|---|---|---|
| 1. | திரு கே. தங்கவேலு,<br>கோட்டப் பொறியாளர், ஆய்வுக் கோட்டம், மதுரை. | கோட்டப் பொறியாளர்,<br>திட்டங்கள், ஈரோடு |
| 2. | திரு எ. கிருஷ்ணசாமி,<br>கோட்டப் பொறியாளர், திட்டங்கள், ஈரோடு | கோட்டப் பொறியாளர்,<br>தரக்கட்டுப்பாடு, திருப்பூர் |

5. மேலே பத்தி 3ல் வழங்கப்பட்ட பதவி உயர்வானது உதவிக் கோட்டப் பொறியாளர் நிலையில் பணிமூப்பு திருத்தம் வெளியிடுதல் குறித்து வழங்கப்பட்ட பல்வேறு நீதிமன்ற ஆணைகளுக்கு உட்பட்டதாகும். இப்பதவி உயர்வு காரணமாக மட்டும் தனியர்கள் கோட்டப் பொறியாளர் பதவி உயர்வில் உரிமை கோர இயலாது. இப்பதவி உயர்வானது தற்காலிகமானது

என்றும், எந்த ஒரு முன்னறிவிப்புமின்றி கீழ் பதவிக்கு அவர்கள் பணியிறக்கம் செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

6. அரசுக் கடித எண் 8119/FR-III/1980, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 30–4–1980ன்படி மேலே பத்தி 3ல் கோட்டப் பொறியாளர் நிலைக்கு பதவி உயர்வு பெற்ற உதவிக் கோட்டப் பொறியாளர்களின் ஊதியத்தை நிர்ணயிக்க ஏதுவாக அவர்கள் அனைவரும் கோட்டப் பொறியாளர் பதவியில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்கின்றனர் என்று சான்றளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்,
அரசு
செயலாளர்.

பெறுநர்

தனியர்கள்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5. (வழியாக)
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், திட்டங்கள், சென்னை – 15.
தலைமைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, சென்னை– 5.
தலைமைப் பொறியாளர், தரஉறுதி மற்றும் ஆராய்ச்சி, சென்னை – 32.
தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு மற்றும் ஆய்வு, சென்னை– 32.
மாநில கணக்காயர், சென்னை – 18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 8 /35.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்.

<u>நகல்:</u>

மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9 .
செயலாளர் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை–9
உதிரி நகல் / இருப்புக் கோப்பு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.